வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC 71/2020 |
| வழக்கு சாட்சி | : | PW 14 |
| நாள் | : | 28.07.2023 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலகிருஷ்ணன் | ஜாதி | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

( எதிரிகள் 1 முதல் 8 வரை ஆஜர்.)

முதல் விசாரணை

சிவகங்கை மாவட்டத்தில் அரண்மணைகரை கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். கடந்த 24.03.2018 அன்று பொதட்டூர் பேட்டை மேற்கு கிராமத்தில் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்த சமயத்தில் சுமார் காலை 10.30 மணியளவில் நானும் எனது உதவியாளரும் எங்கள் அலுவலகத்தில் இருந்தபோது எதிரி சுகுமார் மற்றும் எதிரி ராஜேந்திரன், மணி, மாணிக்கம், கோபால் ஆகியோர் பொதட்டூர் பேட்டை காவல் நிலைய குற்ற வழக்கில் தங்களை போலீசார் தேடுவதாகவும் எனவே சரண்அடைய வந்துள்ளதாகவும் கூறினார்கள். தனசேகர் என்பவரை குமாரராஜபேட்டை ஏரி பகுதியில் கொலை செய்துவிட்டதாக கூறி சரண் அடைந்தார்கள். தனசேகர் வன அலுவலருக்கு ஓட்டுனராக பணிபுரிந்தார் எனவும் அவர்கள் அவருடன் செம்மரம் கட்டை வெட்ட போனதாக கூறினார்கள். தனசேகர் அவர்களை தடுத்ததாகவும் வன அலுவலருக்கு தகவல் கொடுத்துவிடுவதாகவும் கூறிய காரணத்தினால் அவர்களை அனுப்பி வைத்த முரளி என்பவரிடம் கைபேசியில் தகவல் சொல்லி முரளி அவரை விட்டுவிட்டால் பிரச்சணை ஆகிவிடும் என்று கூறி அவரை முடித்துவிடுமாறு சொன்ன காரணத்தினால் தனசேகரை தாங்கள் கொன்றதாக

என்னிடம் சரண் அடைந்தார்கள். சுகுமார் கொடுத்த வாக்குமூலத்தை நான் பதிவு செய்தேன். அவருடன் சரண் அடைந்த மற்ற நால்வரும் உடன் இருந்தார்கள். சுகுமார் மற்றும் நான்கு நபர்களின் கையொப்பத்தை அந்த வாக்குமூலத்தில் பெற்றேன் . அதில் நானும் கையொப்பம் இட்டேன். அந்த வாக்குமூலம் அதசாஆ 32 ஆகும். பொதட்டூர் பேட்டை காவல் நிலையத்தில் அவர்களை ஆஜர் செய்தேன். அவர்கள் கொடுத்த வாக்குமூலத்தை போலீசாரிடம் கொடுத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

பொதட்டூர் பேட்டை மேற்க்கு பகுதிக்கு கிராம நிர்வாக அதிகாரியாக இருந்தேன். 11.03.2018 அன்று ஜெகதீஷ் என்பவர் கிராம நிர்வாக அதிகாரியாக இருந்தார். அன்றைய தினம் அவர் எனது இடத்தில் பொறுப்பு அதிகாரியாக இருந்தார். தனசேகர் மரணத்தை குறித்து காவல் நிலையத்தில் அவர் தான் புகார் கொடுத்தார். குற்ற வழக்கு பதிவு செய்து விசாரணை ஆரம்பித்த பிறகு அந்த குற்றம் தொடர்புடைய யாருடைய வாக்குமூலமும் நான் பெறமுடியாது என்கிற விவரம் எனக்கு தெரியாது. ஆவணங்களின் ஒரு நகல் மட்டும் நான் எடுத்துக்கொண்டேன். எனது உயர் அதிகாரிக்கு நகல் எதுவும் நான் கொடுக்கவில்லை. உயர் அதிகாரிக்கு நகல் கொடுக்கவேண்டும் என்றாலும் அவ்வாறு கொடுக்காமல் இருப்பது எங்களது மேன்வல் படி தவறானது என்றால் சரியல்ல. நான் சரண் அடைந்ததாக சொல்லும் யாரும் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் கிடையாது. எங்கள் ஊரை சேர்ந்த நபர்களிடம் மட்டும் தான் நான் வாக்குமூலம் பெறமுடியும் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது வருவாய் அலுவலர் சொல்லி அவர்களிடம் வாக்குமூலம் பெற்றேன். காவல் நிலைய ஆய்வாளர் வருவாய் ஆய்வாளரிடம் பேசினாரா என்பது எனக்கு தெரியாது. எனக்கு வழக்கு விவரம் தெரியாது என்றாலும் பொதட்டூர் பேட்டை காவல் நிலைய போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆவணம் தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதசாஆ 32 சட்டப்படி செல்லாது ஆவணம் என்றால் சரியல்ல. சுகுமார் மட்டும் என்னிடம் விவரங்களை கூறினார்

மற்ற எதிரிகள் என்னிடம் எதுவும் சொல்லவில்லை. நான் படித்து காண்பித்தேன் அவர்கள் ஆட்சேபனை சொல்லாததால் அவர்களிடம் கையொப்பம் வாங்கினேன். எனக்கு இதுபோல் ஒப்புதல் வாக்குமூலம் வாங்க எந்த அதிகாரமும் இல்லை என்றாலும் சட்டப்படி நான் வாக்குமூலம் பெறாமல் அதசாஆ 32 தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் யாரும் ஏ்ன்னிடம் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC 71/2020 |
| வழக்கு சாட்சி | : | PW 13 |
| நாள் | : | 28.07.2023 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நவீன் | ஜாதி | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

( எதிரிகள் 1 முதல் 8 வரை ஆஜர்.)

முதல் விசாரணை

நான் தாங்கல் காலணி பள்ளிப்பட்டு தாலுக்காவில் வசிக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். 01.03.2018 அன்று இரவு 10 மணியளவில் நான் வேலையை முடித்துவிட்டு பால்டைரி பேருந்து நிறுத்தம் அருகே எனது சித்தப்பா மகன் தனசேகரை பார்த்தேன். இந்த நேரத்தில் ஏன் அங்கு நிற்கிறாய் என்று கேட்டதற்கு நபர்களை பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன் என்று கூறினார். அந்த சமயத்தில் அவருடன் 5, 6 நபர்கள் இருந்தார்கள். இருட்டில் அவர்கள் முகம் தெரியவில்லை. ஆஜர் எதிரிகள் அங்கே இருந்தார்களா என்று எனவே என்னால் சொல்லமுடியவில்லை. நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். மறுநாள் எனது சித்தப்பா தனசேகரை பார்த்தாயா என்று கேட்டார் முன்னால் இரவு தனசேகர் பால்டைரி பேருந்து நிறுத்தம் அருகே பார்த்தாக கூறினேன். அதன்பிறகு காவல நிலையத்தில் அவர்கள் புகார் கொடுத்தார்கள். 10 நாட்கள் கழித்து வாணிவிலாசபுரத்தில் பிரேதம் இருப்பதாக தகவல் வந்தது. ஊர் மக்களுடன் நானும் சென்று பார்த்தேன். அவரது பிரேதம் அழுகிய நிலையில் இருந்தது. போலீசார் பிரேதத்தை பரிசோதனைக்காக எடுத்து சென்றுவிட்டார்கள். தனசேகர் வன அலுவலகத்தில் ஓட்டுனராக பணிபுரிகிறார். செம்மரம் கடத்த அவரை சில

நபர்களை அழைத்து அவர் செல்லாத காரணத்தினால் அவருக்கு மரணம் ஏற்படுத்தியிருக்கலாம். பள்ளிப்பட்டு காவல் நிலைய போலீசார் என்னை விசாரித்தார்கள். அதன் பிறகு பொதட்டூபேட்டை காவல் நிலைய போலீசார் என்னை விசாரித்தார்கள்

குறுக்கு விசாரணை

இதே விவரத்தை தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் .நான் தனசேகரை மேற்சொன்ன இடத்தில், மேற்சொன்ன சமயத்தில் பார்க்வில்லை என்றாலும் போலீசார் சொல்லி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC 71/2020 |
| வழக்கு சாட்சி | : | PW 12 |
| நாள் | : | 28.07.2023 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாந்தகுமார் | ஜாதி | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

( எதிரிகள் 1 முதல் 8 வரை ஆஜர்.)

முதல் விசாரணை

நான் தாங்கல் காலணி பள்ளிபட்டில் குடியிருக்கிறேன். நான் பொறியியல் படிப்பு படித்துள்ளேன். தேநீர் கடையில் காசாளராக பணிபுரிகிறேன். 01.03.2018 இரவு 11.30 மணியளவில் அத்திமஞ்சேரி பிரதான சாலையில் எனது மாமா தனசேகர் நின்றுக்கொண்டிருந்தார் நான் கல்லூரி முடித்து அந்த பக்கமாக வந்துக்கொண்டிருந்தபோது ஏன் நிற்கிறீர்கள் என்று எனது மாமாவை கேட்டேன். தனது நண்பர்கள் வருவதாக கூறினார். நேரம் ஆகிறது வீட்டிற்கு வாங்க என்ற கூறிவிட்டு நான் சென்றுவிட்டேன். மறுநாள் எனது பெரியமாமா தனசாமி எனது மாமா தனசேகர் காணவில்லை என்று கூறினார். எனது அக்கா, மாமா மற்றும் நான் மூவரும் சென்று பள்ளிப்பட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். 10 நாட்கள் கிடைத்து வாணிவிலாச புரம் என்கிற இடத்தில் பிரேதம் இருப்பதாக கூறினார்கள். நாங்கள் மூவரும் வாணிவிலாசபுரத்தில் மலை அடிவாரத்தில் எனது மாமாவின் பிரேதத்தை அடையாளம் கண்டுகண்டோம். அவரது முகம் அழுகி இருந்த நிலையில் அவர் அணிந்திருந்த டி சர்ட்டை வைத்து அடையாளம் கண்டுக்கொண்டும். எனது மாமா தனசேகர் வன அலுவலகத்தில் ஓட்டுனராக பணிபுரிந்தார். சந்தன கடத்தல் அவரை வைத்து செய்ய அன்று அவர்

காத்திருந்த நண்பர்கள் 6 பேர் திட்டம் போட்டதாக தெரியவந்தது. அதன் காரணமாக அவருக்கு மரணம் ஏற்பட்டிருக்கலாம். ஆஜர் எதிரிகளை நான் எங்கும் பார்த்தது கிடையாது. போலீசார் என்னை விசாரித்தார்கள். விசாரணையில் இந்த விவரத்தை சொன்னேன்.

குறுக்கு விசாரணை

இதே விவரத்தை தான் போலீசார் விசாரணையில் சொன்னேன். அன்றைய தினம் எனது மாமாவை நான் பார்க்கவில்லை என்றாலும் பார்த்ததாக போலீசார் சொல்லி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**